# 11

# ஹஜ்

இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளுள் ஐந்தாம் கடமை ஹஜ் என்பதை நீங்கள் அறிவீர்கள். குறிப்பிட்ட மாதத்தில் மக்காவுக்குச் சென்று நிறைவேற்றுகின்ற குறிப்பிட்ட கிரியைகளைக் கொண்ட வணக்கம் ஹஜ் என்று அழைக்கப்படுகின்றது.



''அல்லாஹ்வுக்காக 'ஹஜ்' செய்வது, அங்கு சென்று வர சக்தி பெற்ற மனிதர்களுக்குக் கடமையாகும். எவரேனும் இதனை நிராகரிப்பார்களானால், நிச்சயமாக அல்லாஹ் அகிலத்தாரை விட்டும் தேவையற்றவன்'' (அல்குர்ஆன் 3:97)

மக்காவின் கேந்திர நிலையமாக க.்.பதுல்லாஹ் விளங்குகின்றது. உலகில் மனிதர்களுக்காக அமைக்கப்பட்ட மஸ்ஜித்களில் அது முதன்மையானதாகும். இந்த இடத்துக்குச் செல்வதற்கான வாய்ப்புக் கிடைப்பது பெரும் பாக்கியமாகும். செல்வதற்கு சக்தி பெற்றவர்களுக்கு மாத்திரமே அங்கு சென்று ஹஜ் செய்வது கடமையாகும். இதுவே மேலே குறிப்பிடப்பட்டுள்ள திருவசனத்தின் கருத்தாகும்.

**'அங்கு செல்வதற்குச் சக்தி பெற்றவர்' என்பதன் விளக்கம்**

- மக்கா சென்று வரப் பொருளாதார வசதி உள்ளவராக இருத்தல்
- உடல் வலிமையும் ஆரோக்கியமும் உள்ளவராக இருத்தல்
- ஹஜ் கிரியைகள் நிறைவேற்றப்படும் இடங்களைச் சென்றடையவும் அவற்றை நிறைவேற்றவும் சக்தி பெற்றவராக இருத்தல்
- அங்கு சென்று திரும்பும் வரை அவரது குடும்பப் பராமரிப்புக்குத் தேவையான பணத்தையும் பாதுகாப்பு ஏற்பாட்டையும் செய்ய சக்தியுள்ளவராயிருத்தல்.
- பெண்களைப் பொறுத்தவரை மஹ்ரமான ஆண் துணையைப் பெற்றவராக இருத்தல்.

மேற்படி தகைமைகளைக் கொண்டிருப்போருக்கு வாழ்நாளில் ஒரு முறை ஹஜ் செய்வது கடமையாகும்.

**ஹஜ்ஜுக்குச் செல்வோர் கீழ்க்காணும் விடயங்களையும் பூர்த்தி செய்துகொள்ள வேண்டும்.**

1. ஹஜ், உம்ரா கடமைகள் பற்றிய அறிவையும் விளக்கத்தையும் பெற்றிருத்தல்
2. கடன், கொடுக்கல்-வாங்கல் மற்றும் பொறுப்புக்களை நிவர்த்தி செய்தவராக இருத்தல்
3. 'ஸகாத்' கடமைப்பட்டவராக இருந்தால், அதனை நிறைவேற்றி விட்டுச் செல்லல்.
4. உறவினர், நண்பர், அயலவர் மற்றும் சம்பந்தப் பட்டவர்களுடன் கோபதாபம், பிரச்சினைகள் இருப்பின் அவற்றை தீர்த்து விட்டுச் செல்லல்.



இப்போது நீங்கள் ஹஜ்ஜுக்குச் செல்வோரிடம் காணப்பட வேண்டிய தகைமைகள் மற்றும் பண்புகளைத் தெரிந்து கொண்டீர்கள்.

இனி, ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு, வசதி, மற்றும் தகைமைகள் கிடைத்து விட்டால் கால தாமதம் செய்யாமல் அதனை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்பதை உணர்த்தும் நபிமொழிகளைக் கவனியுங்கள்.

- ''அல்லாஹ்வின் இல்லம் செல்வதற்கான வசதி மற்றும் போக்குவரத்து சாதனத்தை ஒருவர் பெற்றிருந்தும் ஹஜ் செய்யவில்லையானால், அவர் யஹூதியாகவோ நஸாரா வாகவோ மரணிக்கட்டும். ஏனெனில், அல்லாஹ்வின் இல்லம் சென்று வர சக்தி பெற்றவர் அல்லாஹ்வுக்காக ஹஜ் செய்வது அவசியமாகும்'' (திர்மிதி)

- ‘‘ஹஜ் செய்ய விரும்புகின்றவர் அவசரமாக அதனை நிறைவேற்றட்டும். ஏனெனில், அவர் ஹஜ் செய்ய முடியாத வகையில் நோய்வாய்ப்படலாம். அவரது வாகனம் தொலைந்து விடலாம். அல்லது அவருக்கு வேறு தேவைகள் ஏற்பட்டு விடலாம்’’ (அஹ்மத், பைஹகீ, இப்னுமாஜா).

இவை போன்ற மற்றும் பல நபிமொழிகள் ஹஜ்ஜின் முக்கியத்துவத்தை உணர்த்திக் கொண்டிருக்கின்றன.

அடுத்து, ஹஜ்ஜின் சிறப்பை பின்வரும் நபிமொழிகள் மூலம் தெரிந்து கொள்வோம்.

- ‘‘பாவம், வறுமை என்பவற்றை ஹஜ்ஜும் உம்ராவும் அகற்றிவிடுகின்றன. அங்கீகரிக்கப் பட்ட ஹஜ்ஜுக்கு சுவனத்தைத் தவிர வேறு கூலி இல்லை’’ (நஸாயீ)
- ஹஜ் செய்பவர்களும் உம்ராச் செய்பவர்களும் அல்லாஹ்வின் விருந்தாளிகளாவர். அவர்கள் துஆக் கேட்பார்களாயின் அதனை அல்லாஹ் ஏற்றுக் கொள்வான். அவர்கள் பாவ மன்னிப்புக் கோருவார்களாயின் அவர்களின் பாவங்களை அல்லாஹ் மன்னித்து விடுவான்’’ (இப்னு மாஜா).
- ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ‘‘அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்வதையே நாங்கள் சிறந்த செயலாகக் கருதுகின்றோம். ஆகவே, நாங்களும் ஜிஹாத் செய்யலாமா என்று கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள், அவ்வாறு இல்லை. எனினும் (பெண்களுக்கு) சிறந்த ஜிஹாத் பாவச் செயல்கள் கலவாத ஹஜ் (ஹஜ் மப்ரூர்) என்றார்கள்’’ (ஸஹீஹுல் புஹாரி).

இதுவரை ஹஜ் மற்றும் உம்ராக் கடமைகளின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் கவனித்தோம். இப்போது இக்கிரியைகளால் எமது வாழ்வில் ஏற்படுகின்ற முக்கியமான பயன்களை நோக்குவோம்.

- இறை இல்லமான க.்.பாவிலும், ஹஜ் கிரியைகள் நிறைவேற்றப்படுகின்ற ஏனைய புனித இடங்களிலும் ஹாஜிகள் அல்லாஹ்வுடன் அதிக நெருக்கத்தை பெறுகின்றனர். ‘‘உனக்கு அடிபணிந்து உன்னிடம் வந்து விட்டோம்’ என்ற தல்பியாவை உரத்து ஒலிப்பதன் மூலம், அல்லாஹ்வின் மீது கொண்டுள்ள அன்பையும், பணிவையும் பக்திபூர்வமாகப் பறைசாற்றுகின்றனர். இது இறை அச்சத்தையும் பணிவையும் கட்டுப்பாட்டையும் ஹாஜிகளிடம் தோற்றுவிக்கின்றது.
- ஹாஜிகள் தவாப் செய்கின்ற வேளையிலும் ‘ஸ.்.யு’ செய்யும் போதும், ஏனைய புனிதத் தலங்களில் புரிகின்ற கிரியைகளின் போதும் அல்லாஹ்வை அதிகம் அதிகம் துதிக்கின்றனர். அவனைப் போற்றிப் புகழ்கின்றனர். அவன் அருளை வேண்டிப் பிரார்த்திக் கின்றனர். இவற்றின் மூலம் ஈமானிய உணர்வும் உறுதியும் வலுவடைகின்றன.
- ஹஜ் கிரியைகளின்போது அல்லாஹ்வின் ஆற்றலும் வல்லமையும், அவன் மீது கொண்டுள்ள நம்பிக்கையும் ஹாஜிகளின் உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இவற்றின் காரணமாக அர்ப்பணிப்பு, தயாளம், சகிப்புத் தன்மை போன்ற பண்புகள் ஹாஜிகள் வாழ்வில் தோற்றம் பெறுகின்றன. ஆகவேதான், ‘ஹஜ் ஒரு மனிதனுடைய வாழ்வை தூய்மையானதாக மாற்றுகின்றது’ எனக் கூறப்படுகின்றது.

- ஹஜ், உலகளாவிய முஸ்லிம் உம்மத்தை ஒன்றிணைக்கின்றது. அங்கு இன, நிற, மொழி, பிரதேச வேறுபாடுகள் கவனிக்கப்படுவதில்லை. ஒரே உம்மத்தைச் சேர்ந்தோர் என்ற உணர்வே அங்கு மேலோங்கிக் காணப்படும்.
- ஹஜ்ஜின் கிரியைகளை நிறைவேற்றும்போது இப்றாஹீம் (அலை) அவர்களது மகன் இஸ்மாயீல் (அலை), அவரது தாயார் ஹாஜர் (அலை) ஆகியோரின் தியாக வரலாறு ஹாஜிகள் மனக் கண்ணில் தோன்றும். இதன் காரணமாக அத்தகைய தியாகங்களைப் புரிய வேண்டும் என்ற மனோபாவத்தை ஹாஜிகள் பெறுகின்றனர்.
- தீய வார்த்தைகள் பேசுதல், சச்சரவு செய்தல் போன்ற தீய விடயங்கள் ஹஜ்ஜின்போது தடைசெய்யப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் தன்னைக் கட்டுப்படுத்தி, தன் நாவைக் கட்டுப்படுத்திப் பழகிய ஹாஜிகள், ஹஜ்ஜின் மூலம் சிறந்த பயிற்சியைப் பெறுகின்றனர்.
- ‘‘பிறருக்குத் துன்பம் செய்யாமலும், பாவம் புரியாமலும் ஹஜ்ஜை நிறைவேற்றியோர், அன்று பிறந்த பாலகனைப் போன்று (தனது வீடு) திரும்புகின்றார்’’ (புஹாரி, முஸ்லிம்) என்ற நபிமொழி ஹஜ்ஜை நிறைவேற்றியவர்களின் சிறப்பையும் அவர்களின் தன்மையையும் எடுத்துக் காட்டுகின்றது. இத்தகையோர் மற்றவருக்கு எப்போதும் முன்மாதிரியாகத் திகழ்வர்.

பொதுவாக ஹஜ்ஜின்போது ஹாஜிகளுக்கு ஏற்படுகின்ற அறிவு, அனுபவம் என்பன அவர்களிடம் நல்ல மனப்பாங்கை ஏற்படுத்தி அவர்களின் வாழ்வில் நல்ல மாற்றத்தைக் கொண்டு வருகின்றன.

ஹாஜிகள், ஹஜ்ஜின் கிரியைகளை மாத்திரம் நிறைவேற்றியவர்களாக நாடு திரும்பாமல், தமது அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பயிற்சிகளையும் பெற்றவர்களாக நாடு திரும்ப வேண்டும். அதுவே ‘ஹஜ் மப்ரூர்’ ஆக அமையும்.


**விசேட இடங்கள்**



அரபா மைதானம்




ஹஜருல் அஸ்வத்



மகாமு இப்றாஹீம்



ஸபா - மர்வா

**பயிற்சி:**

1. சரி பிழை கூறுக.

(அ) வசதியுள்ளவர்கள் ஒவ்வொரு வருடமும் ஹஜ்ஜுக்குச் செல்ல வேண்டும். (....)

(ஆ) ஹஜ்ஜுக்குச் செல்வோர் தமது குடும்பப் பராமரிப்புக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து விட்டுச் செல்ல வேண்டும். (.......)

(இ) ஹஜ் கிரியைகள் இப்றாஹீம் (அலை) அவர்களினதும் அவரது மகன் இஸ்ஹாக் (அலை) அவர்களினதும் வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்டுள்ளன. (.....)

(ஈ) ஹஜ்ஜுக்குச் செல்ல முன்னர் ஹஜ் கடமையை நிறைவேற்றும் முறையினைத் தெரிந்து கொள்ள வேண்டும். (.....)

2 ஹஜ்ஜை முடித்து நாடு திரும்பிய ஹாஜிகளிடம் காணப்பட வேண்டி பண்புகள் நான்கைக் குறிப்பிடுக.

1.

2.

3.

4.

**செயற்பாடு:**

1. ஹஜ்ஜுக்கு சென்று மீண்ட ஒருவரை சந்தித்து அவர் பெற்ற அனுபவங்களைக் கேட்டறிந்து தொகுத்து எழுதுங்கள்.